## ஆகஸ்ட் - 14

**"சீஷன் தன் போதகனைப் போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப் போலவும் இருப்பது போதும். வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?" - மத் 10 : 25**

சத்தியம் எவ்வளவு தயவாய் சொல்லப்பட்டாலும், அது எல்லா பக்கங்களிலும் ஊடுருவிகிற ஒரு பட்டயமாக இருக்கிறது. நம்முடைய கர்த்தர் முன் கூட்டியே அறிவித்திருக்கிறதுப் போல, சத்தியம் அடிக்கடி பிள்ளைகளுக்கு விரோதமாகப் பெற்றோரையும், பெற்றாருக்கு விரோதமாக பிள்ளைகளையும் எதிர்க்கச் செய்கிறது. ஏனென்றால், இருள் வெளிச்சத்தை வெறுத்து எல்லா கூடுமான வகையிலும் அதை எதிர்க்கிறது. இது விஷயமாகக் கர்த்தர் சொல்லியிருப்பதின் காரணமாகவும், சத்தியத்தை எவ்வளவு மிகவும் ஞானமாக மற்றவர்களிடம் அறிமுகம் செய்தாலும், முடிவில் நம்மைப்பற்றி தவறான அபிப்பிராயம் கொள்ளுகிறார்கள் என்பதாலும், சத்தியத்திற்காக உண்மையாகவேத் தொண்டு செய்கிற ஒவ்வொருவரும் மற்றவர்களால் தவறாக எண்ணப்படாதபடிக்கு எவ்வளவு கவனமாக இருக்க முடியுமோ, அவ்வளவு கவனமாக இருப்பது அவர்களுக்குத் தகுதியாக இருக்கும். நாம் எந்தவிதமான அராஜகத்தில் கலந்து கொள்ளுகிறதில்லை என்பதையும், அராஜகத்துக்காகப் பரிந்து பேசுகிறதில்லை என்பதையும் ஆனால், அதற்கு மாறாக நாம் நீதிக்காகவும், பிரமாணங்களில் மிக உயர்வான தெய்வீகப்பிரமாணங்களின் சார்பாக ஆதரவளிக்கிறோம் என்பதையும் மற்றவர்கள் தெளிவாக அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும். **- Z '03, 13(R 3130)**

எல்லா நோக்கின்படி பார்த்தாலும், உண்மையாகவே சீஷன் தன் போதகனைப்போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதுமானதாக இருக்கிறது. போதகரும் எஜமானருமாகியவரிடமிருந்து சீஷனும் வேலைக்காரனுமானவனுக்குக் கிடைக்கிற கனம் போதும், கௌரவம் போதும், வெகுமதி போதும், மேன்மை போதும், அங்கீகாரம் போதும், சிபாரிசு போதும், சரீரத்தில் நம்முடைய சொற்பகால வாசத்திற்குத் தகுந்த விரும்பக்கூடிய காரியம் நம்முடைய கர்த்தர் நடத்தப்பட்டதைப் போன்றதொன்றைவிட அதிகமாக நாம் எதை கேட்கக் கூடும்? இது நமக்கு மரணபரியந்தம் பரிகாசத்தையும் அவதூறையும் சமூகத்திலிருந்து தள்ளி வைக்கப்படுதலையும் புறதேசத்திற்கு அகற்றப்படுதலையும், கொடுமையையும் கொண்டு வந்தால், நமது கர்த்தருக்குக் கிடைத்தது போன்ற நடத்துதலை கொடுத்து இவ்விதமாக நாம் கனம் பண்ணப்படுகிறோம் என்பதற்காக நாம் நம்மையே பாராட்ட வேண்டும். இது நம்மைப்புகுத்தும் நன்மையான ஐக்கியத்திலும், நம்மை வழி நடத்துகிற நன்மையான சுதந்திரத்திலும் நாம் சந்தோஷப்பட்டுக் களிகூரக்கடவோம். **- P '30, 109.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**மத் 12:24; மாற் 3:22; லூக் 6:40; 11:15; யோவா 8:48,52; 17:14; 13:16; 15:20; 2தீமோ 3:12; 2:11,12; அப் 14:22; 1பேது 2:19-24.**

**கோபுர வாசிப்பு : Z '09, 154 (R 4395)**

**வினாக்கள்: கர்த்தரிடம் விசுவாசமாயிருப்பதற்காக நான் இந்த வாரத்தில் தூஷிக்கப்பட்டேனா? நான் அதை எவ்வாறு சகித்தேன்? மகிமையும் சிலாக்கியமாகவுமா அல்லது அவமானமும் பாரமானதாகவுமா? அதில் உதவியதும் இடையூராயிருந்ததும் எது ?**